# இரண்டாம் இடைப் பருவ தேர்வு – நவம்பர் - 2024

**நேரம் : 1.30 மணி** **பொருளியல்** **மதிப்பெண் : 45**

**வகுப்பு : 12**

## பகுதி – அ

**10x1=10**

***I. (i) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக (ii) அனைத்து வினாக்களுக்கும் விடையளி***

1. கீழ் வருவனவற்றுள் எது நேர்முக வரி? அ) கலால் வரி ஆ) வருமான வரி இ) சுங்க வரி ஈ) சேவை வரி
2. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது. அ) கட்டாயத் தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை இ) வரி மறுப்பு ஒரு குற்றம் ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்.
3. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது. அ) பொருளாதார முன்னேற்றம். ஆ) பொருளாதார நிலைத் தன்மை. இ) பொருளாதார சமத்துவம். ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்.
4. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது? அ) UV - A ஆ) UV - C இ) ஓசோன் படலம். ஈ) மேற் சொன்ன எதுவுமில்லை.
5. அமிலமழைக் ------------- விளைவுகளில் ஒன்று. அ) காற்று மாசு. ஆ) நீர் மாசு. இ) நில மாசு. ஈ) ஒலி மாசு.
6. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி? அ) அயனோஸ்பியர். ஆ) லித் தோஸ்பியர். இ) பையொஸ்பியர் ஈ) மெஸ்சோஸ்பியர்
7. கீழ்க்காணும் எந்தத் திட்டம், வேளாண்மையும் கிராமப் பொருளாதாரத்தையும் மையமாகக் கொண்டது? அ) மக்கள் திட்டம். ஆ) பாம்பபே திட்டம். இ) காந்தியத் திட்டம். ஈ) விஸ்வேசுவரய்யா திட்டம்.
8. சுட்டிக்காட்டும் திட்டமிடலைச் செயல்படுத்திய நாடு. அ) பிரான்சு. ஆ) ஜெர்மனி. இ) இத்தாலி. ஈ) இரஷ்யா.
9. நிதி ஆயோக் கீழ்க்ககாணும் எதன் மூலமாக அமைக்கப்பட்டது? அ) குடியரசு தலைவரின் அவசர ஆணை ஆ) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை இ) அமைச்சரவைத் தீர்மானம். ஈ) இவை எதுவுமில்லை.
10. " அடிமைத்தனத்திற்க்கான பாதை " எனும் புத்தகத்தை எழுதியவர் யார்?. அ) பிரடெரிக் ஹேயக். ஆ) ஜெ ஆர் ஹிக்ஸ். இ) டேவிட் ரிக்கார்டோ. ஈ) டி.ஆர். மால்தஸ்.

## பகுதி – ஆ

***II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி*** **4x2=8**

11. நிதி ஆயோக் பற்றிக் குறிப்பு வரைக.
12. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.
13. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
14. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.
15. GST யின் கூறுகள் யாவை?
16. "வரி", "கட்டணம்" வேறுபடுத்துக.

## பகுதி – இ

***III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி*** **4x3=12**

17. வறுமை நச்சுச் சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக.
18. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி.
19. இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.
20. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.
21. தற்கால அரசின் பணிகள் யாவை?
22. நேர்முக மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.

## பகுதி – ஈ

***IV. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி*** **3x5=15**

23. a) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி (அல்லது)

b) பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

24. a) புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.

(அல்லது)

b) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

25. a) வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பலவகைப் பற்றாக்குறைகளை விளக்குக.

(அல்லது)

b) நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.

*******

TTK-12-ECO-TM-SINGLE

www.Padasalai.Net